IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 144 /2014
Deposition of witness for PW2

Name : விஜயன்

Father Name : வேலாயுதம்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 4 day of July, 2023.

குறுக்கு விசாரணை

1. நான் தற்பொழுது எந்த வேலையும் செய்யவில்லை. நான் தற்சமயம் சென்னையில் வசித்து வருகிறேன். 7 வருடங்களாக சென்னையில் வசித்து வருகிறேன். சென்னையிலிருந்து தான் இன்று சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி லலிதா என்னுடைய உடன் பிறந்த சகோதரி. இதற்கு முன்பு 1983-லிருந்து 2013-ஆண்டு வரை கடற்படையில் வேலை செய்துவந்தேன். 2013-க்கு பிறகு சென்னையில் வசித்து வருகிறேன். என்னுடைய முதல்விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் வாய்மொழி பாகப்பிரிவினை செய்துகொள்ளப்பட்ட விவரம் குறித்து எனக்கு நேரிடையாக தெரியுமா என்றால் தெரியும் சாட்சி தற்பொழுது மாற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்று கூறுகிறார்.

2. வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துகொள்ளப்பட்டதற்கு ஏற்பட்ட பத்திரத்தை நான் பார்த்தேன். அந்த ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் வாதி தாக்கல் செய்துள்ளார். எனக்கு வாய்மொழிமூலமாக பாகப்பிரிவினை செய்து கொள்வதற்கும், பத்திரம் மூலம் பாகப்பிரிவினை செய்துகொள்வதற்கும் வேறுபாடு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துகொண்டதாக முதல் விசாரணை சாட்சியம் அளித்துவிட்டு பத்திரம் ஏற்பட்டதாக முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. 13.6.1995 அன்று இயேசு என்பவர் எனக்கு பொது அதிகாரம் அளித்துள்ளார். பொதுஅதிகாரத்தில் கண்ட சொத்து இயேசுவிற்கு பாத்தியப்பட்டது தான் என்பதை அறிய

அதற்குரிய உரிமை மூல ஆவணம் மற்றும் வருவாய் ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால், வரி ரசீதுகளையும், பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரத்தையும் பார்த்தேன். இயேசு பெயரிலான பட்டாவை நான் பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி பொது அதிகாரத்தின் அடிப்படையில் நான் வாதிக்கு 2009-ம் வருடம் கிரையம் கொடுத்தேன். பொது அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தானது பிரதிவாதி ஜார்ஜ் சுவாதீனத்தில் தான் இருந்து வந்தது என்றால் இல்லை.

4. பொது அதிகாரத்தில் கண்ட சொத்து என்னுடைய அனுபவத்தில் தான் இருந்து வந்ததை காட்ட அடங்கல் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி லலிதா புத்தூரில் கிராம நிர்வாக அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். பொதுவாக நிலம் யாருடைய அனுபவத்தில் உள்ளதோ அவர் பெயரில் தான் அடங்கல், பட்டா வழங்கப்படும் என்றால் சரிதான். எனக்கு பொது அதிகாரம் வழங்கப்பட்ட 1995- முதல் 15 வருடங்களுக்கு பிறகு வாதிக்கு கிரையம் கொடுப்பதற்கான காரணம் என்ன என்றால் எனக்கு பணத்தேவை இருந்ததால் கிரையம் கொடுத்தேன்.

5. என்னுடைய பணத்தேவைக்காகத்தான் கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். வேறு யாருடைய பணத்தேவைக்காகவும் நான் கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் பெயரிலான பொது அதிகாரப்பத்திரமே மோசடியானது என்றும், அதனடிப்படையில் வாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரையமானது ஒரு பெயரளவிலான கிரையம் என்றும் அந்த கிரைய ஆவணம் செல்லதக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி கிரையபத்திரத்தின் அடிப்படையிலும், வாதி எந்த ஒருகாலத்திலும் வழக்கு சொத்து சுவாதீனத்தில் இருந்ததே இல்லை என்றால் சரியல்ல.

6. வழக்கு சொத்திற்கான பட்டா பிரதிவாதி ஜார்ஜ் பெயரில் தான் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியும். அவர் தான் வழக்கு சொத்திற்கான அனைத்து வரியையும் செலுத்தி வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. எம்.ஜி.ராமசந்திரன், கங்காதரன்

ஆகிய கிராமநிர்வாக அலுலர்கள் வாதி வருவாய்த்துறையில் பணிபுரிந்ததால் அவருக்காக வேண்டி மோசடியாக வாதி பெயருக்கு பட்டா வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. வாதி என் சகோதரி என்பதால் அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கையே நான் தான் என் சகோதரியான வாதி பெயரில் நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.